# ***புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி***

2014 தை மாதம் 20ம் திகதி முதல் 2014 தை மாதம் 26ம் திகதி வரை

## ***“கிறிஸ்துநாதருக்குள் இருந்த புத்திரத்தன்மையின் அபிமானம்”***

01. ஆரம்பப் பாடல் இல 38 “தூய ஆவியானவரே.............................”

02. * உணர்ந்த நிலையில் இறை புத்திரனாக வாழ்வதற்கு கடந்த வாரத்தினுள் நாம் எடுத்த முயற்சிகளில் எமது வாழ்க்கை அனுபவங்களை சங்கமாக்கிக் கொள்வோம்.

    * தவறி விழுந்தாலும் அவ்வாறான வாழ்க்கை பயணத்தில் ஈடுபடுவதற்கு எமக்கு கிடைத்திருக்கும் பாக்கியமான நிலையை முன் கொண்டு இறைவனைப் புகழ்வோம்.

03. நற்செய்தி

* மனிதன் தனது வாழ்க்கை முழுவதிலும் சுய அபிமானத்தை (தற்பெருமை) தேடுகின்றான். மற்றவர்கள் முன்னிலையில் உயர்வான ஒருவராகவும், முக்கியமான ஒருவராகவும் தன்னை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை காண முடியுமாக இருக்கின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் தனக்குள் இல்லாத நிலையை வெளிப்படுத்துவதற்கு, தான் பழகுகின்ற, தான் அறிந்த செல்வந்தர்கள், வல்லமை மிகுந்தவர்களுடைய தனக்கு இருக்கும் தொடர்பை வெளிப்படுத்தியவாறு பெருமையாக தன்னை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் ஏராளமாக இருக்கின்றது. ஆனாலும் அவனுக்கு கிடைத்திருக்கும் இறைபுத்திரத்தன்மையின் அபிமானத்தை மறந்த நிலையில் இருக்கின்றான். ***‘மாறாக கடவுளின் பிள்ளைக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள். அதனால் நாம், “அப்பா தந்தையே” என அழைக்கின்றோம்’*** (உரோமர் 8:15) கலந்துரையாடுங்கள்.

நற்செய்தியை உறுதிப்படுத்துவதற்கு

யோர்தான் நதிக்கரையில் தான் பெற்ற புத்திரத்தன்மையின் அபிமானம் கிறிஸ்துவுக்கு உரியதாகும். அவர் செயல்படுவது அவ் அபிமானத்திலேயாகும். சீடர்களை அழைக்கும் பொழுது எவ்வித தயக்கமுமின்றி வல்லமையோடு அழைக்கின்றார். ***“என் பின்னே வாருங்கள்: நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவென்” என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.*** (புனித மத்தேயு 4:19-20) ***இயேசுவின் சீடருள் மற்றொருவர் “ஐயா, முதலில் நான் போய் எனது தந்தையை அடக்கம் செய்து விட்டு வர அனுமதியும்: என்றார். இயேசு அவரைப் பார்த்து, “நீர் என்னைப் பின்பற்றி வாரும். இறந்தோரைப் பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள்” என்றார்.*** (புனித மத்தேயு 8:21-22)

* தேவாலயம் இன்று போல் அன்று யூத மக்களுடைய மிகவும் முக்கியமாதொன்றாகும். தேவாலயத்தின் பொறுப்பாளர்களாக தலைமைக் குருக்களும், பரிசேயர்களும் இருந்தார்கள். ஆனாலும் தனது தந்தைக்காக அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயத்தில், விற்பனையில் ஈடுபட்டிருந்ததை வியாபாரிகளை ஏற்றுக் கொள்ள முடியாத கிறிஸ்துநாதர் அவர்களை தேவாலயத்திலிருந்து வெளியே விரட்டியடித்து தேவாலயத்தின் உண்மையான இறைவனின் உரிமையாளராக செயல்பட்டார்.

***இயேசு கோவிலுக்குள் சென்று அங்கு விற்பனை செய்து கொண்டிருந்தோரை வெளியே துரத்தத் தொடங்கினார். அவர்களிடம், 'என் இல்லம் இறை வேண்டலின் வீடு' என்று மறை நூலில் எழுதியுள்ளதே: ஆனால் நீங்கள் இதை கள்வர் குகையாக்கினீர்கள்" என்று கூறினார்.*** (புனித லூக்கா 19: 45-46)

* ஏரோது பிலாத்து போன்ற யூத அதிகாரிகள் முன்னிலையில் கிறிஸ்துநாதருக்கு இருந்த புத்திரத்தன்மையின் அபிமானத்தை ஒரு கணத்திலேனும் அவமதிப்பதற்கு இடமளிக்கவில்லை. ***அந்நேரத்தில் பரிசேயர் சிலர் இயேசுவிடம் வந்து, "இங்கிருந்து போய்விடும்: ஏனெனில் ஏரோது உம்மைக் கொல்ல வேண்டும் என்றிருக்கிறான்" என்று கூறினர். அதற்கு அவர் கூறியது: "இன்றும் நாளையும் பேய்களை ஓட்டுவேன்: பிணிகளைப் போக்குவேன்: மூன்றாம் நாளில் என் பணி நிறைவு பெறும் என நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள்.*** (புனித லூக்கா 13:31-32)

* மரணத்திற்கு தீர்ப்பளிக்கும் வல்லமை பிலாத்திற்கு இருந்தபடியினால், கிறிஸ்துநாதர் அதை நினைவில் வைத்தவாறு தனது அபிமானத்திற்கு எதிராக கேட்ட கேள்விகளுக்கு பதில்களை பெற்றுக் கொள்வதற்கு பிலாத்து முயற்சி செய்தாலும் மரணத் தீர்ப்பின் முன்னிலையில் தனது புத்திரத்தன்மையின் அபிமானத்திற்கு சிறிதளவேனும் அவமானம் ஏற்படுவதற்கு இடமளிக்கவில்லை.

04. வாரம் முழுவதும்

- நாம் அனைவரும் இறை புத்திரர்கள் என நினைவில் கொள்வோம். கிறிஸ்துநாதர் எமக்கு காண்பித்த இறை புத்திரத்தன்மையின் அபிமானத்தை பாதுகாப்பதற்கு தினமும் விழிப்புற்று செயல்படுவோம்.
- கடந்த காலத்தினுள் அவ் புத்திரத்தன்மையை மறந்து செயல்பட்டதற்காக மனம் வருந்துவோம்.
- பலவிதமான அரசியல் வல்லமை வாய்ந்தவர்களின் ஏமாற்றுதலான வார்த்தைகளுக்கு அடிமையாகாமல் சத்தியத்திற்கு, நீதிக்கேற்ப எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதற்கு விழிப்புறுவோம்.

05. இறுதிப்பாடல் புபுது பாடல் இல 298 "சிறிய மகன்...................."